# சிங்கப்பூரில் இனரீதியாக வகைப்படுத்தும் முறைக்கு இன்னும் தேவை இருக்கிறது

***Tamil Seithi (News) Mediacorp***, 8th November 2017

சிங்கப்பூரில் சீனர், மலாய், இந்தியர், இதர இனத்தவர் என வகைப்படுத்தும் முறைக்கு இன்னமும் தேவையிருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

இனம் சார்ந்த கொள்கைகளுக்கும் தேவையிருப்பதாகக் கொள்கை ஆய்வுக் கழகமும் சேனல் நியூஸ்ஏஷியாவும் இணைந்து நடத்திய பெரிய அளவிலான ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன.

சிங்கப்பூரில் இருக்கும் இனப் பிரிவுகளின் முக்கிய அடையாளக் கூறுகள் எனச் சிங்கப்பூரர்கள் கருதும் அம்சங்கள் யாவை என்பதைத் தெரிந்துகொள்வது ஆய்வின் நோக்கம்.

ஆய்வில் கலந்து கொண்ட இளையர்கள் பலரும் தங்களின் முக்கிய அடையாளக் கூறுகள் பற்றி அக்கறை கொண்டிருப்பது தெரிய வந்ததாக ஆய்வை வழிநடத்திய முதன்மை ஆய்வாளர் டாக்டர் மாத்தியூ மாத்தியூஸ் தெரிவித்தார்.

சிங்கப்பூரர்கள் தொடர்ந்து இனவாரியாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொள்வதை முக்கியமான ஒன்றாகக் கருதுவதாக அவர் விளக்கினார்.

ஆய்வில் 2,000க்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள் கலந்து கொண்டனர்.